(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 141.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஏப்ரல் 07, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

749/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களில் தற்போது எரிபொருள் மானியத்தைப் பெறும் கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) எரிபொருள் மானியத்தை உரிய நேரத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

842/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது கழிவுகளை அகற்றும் கரதியான பிரதேசத்தில், கழிவுப்பொருள் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை குறித்து அறிவாரா;

(ii) இதிலிருந்து உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) மேற்படி நிலையத்தின் நிர்மாணப் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

884/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1014/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டிலும், நாடு முழுவதிலும் மற்றும் வட மாகாணத்தினுள்ளும் வெவ்வேறாகப் பதியப்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடைய சைபர் குற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ அரசாங்க சைபர் குற்றப் பதிவு இணையதளங்களூடாக (Portals) அல்லது பொலிஸ் சைபர் அலகுகளினூடாக வட மாகாணத்திலிருந்து பெறப்பட்ட அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறிப்பாக வட மாகாணக் கிராமியப் பெண்களுக்கான சைபர் குற்றப் பதிவுப் பொறிமுறைகளையும் பாதிக்கப்பட்டோருக்கான உதவிச் சேவைகளுக்கான அணுகல் பொறிமுறையினையும் மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1030/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் பல்வேறு அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் 2020ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவ்வைத்தியசாலையில் 16 வயது வரையான சிறுவர்கள் மாத்திரமே சிகிச்சைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் பல்வேறு அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக சிறுவர்கள் காத்திருக்கும் காலத்தை குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1089/2025

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனிக்காக புதிதாக A330-200 wide body விமானம் பெற்றுக்கொள்ளப்பட்ட கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) அந்தக் கம்பனியை பரிந்துரை செய்தது யாரென்பதையும்;

(iii) மேற்படி விமானம் உற்பத்தி செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அந்த விமானம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், குத்தகை தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மாதாந்த குத்தகை தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1246/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம கமநல சேவைகள் நிலையத்தில் ஒரு தொகை உரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உரத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி உரம் எந்த ஆண்டிலிருந்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி உரத்தொகையை இதுவரையில் விவசாயிகளுக்கு விநியோகிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி உரத்தொகையை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்காகப் பின்பற்றப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(vii) மேற்படி உரத்தொகையை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1369/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை அரச பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் காரணமாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருப்பின் அவ்வெண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அவ்வாறு பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை பாடசாலைக் கட்டமைப்பில் துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இடம்பெறுவதை நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1679/2025

கௌரவ லால் பிரேமநாத்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘அஸ்வெசும’ நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுள் தீர்வு காணப்பட்டு வரும் மற்றும் மீள நலன்புரி நன்மைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தீர்வு காணும் நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ‘அஸ்வெசும’ பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக தர்க்க ரீதியிலான தரவு முறைமையொன்றினை அறிமுகம் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அதனூடாக உறுதிப்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கின்ற புதிய தரவுகள் யாவையென்பதையும்;

(iii) போலியான தகவல்களை வழங்கி நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொண்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iv) அவர்களுக்கு செலுத்திய பணத்தை மீள அறவிட்டுக்கொள்வதற்கு மற்றும் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மீள அறவிட்டுக்கொண்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் ‘அஸ்வெசும’ நலன்புரி நன்மைகளை ஒப்பீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பயனாளிகளின் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2026 ஏப்ரல் 09 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல்-2026 தொடர்பாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 4ஊ இன் கீழ் தகுதிபெறுவதற்கான அளவுகோல்களையும், வரி விலக்களிப்புகள் அல்லது வரிச் சலுகைகள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2474/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 7(1)(இ) மற்றும் பகுதி VI என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் தொடர்பாக ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 30 ஆம் திகதிய 2473/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல் தொடர்பாக 2026 பெப்ரவரி 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

*6.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்,— இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.09.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.09.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— தரைப்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கடற்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— வான்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*16.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

17.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1849/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் நடவடிக்கைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 2025.07.15 ஆம் திகதிய அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படிக் குழுவின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) அவ்விதப்புரைகளின் பிரகாரம், இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிருவாக மாற்றங்கள் யாவை என்பதையும்;

(v) குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளின் பிரகாரம், மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள சட்டரீதியான திருத்தங்கள் யாவை என்பதையும்;

(vi) அத்திருத்தங்கள் தொடர்பாக தற்போது நிலவும் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடன் இணக்கச் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) கடன் இணக்கச் சபைக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கடன் இணக்கச் சபைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1865/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் உரித்துச் சான்றிதழ் வழங்குவதை அமுல்படுத்துகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(ii) இதுவரை மேற்படி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை யாது;

(iii) காணி உரித்து நிர்ணய திணைக்களத்தின் கீழ் தற்போது சேவையாற்றி வருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் சட்டரீதியான அந்தஸ்தை இற்றைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், உத்தேச சட்ட மறுசீரமைப்புக்கள் யாவை;

(iii) மேற்படி சட்ட மறுசீரமைப்புக்களை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

3.

1866/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'Clean Sri Lanka' சனாதிபதி செயலணியின் தற்போதைய அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) தற்போதுவரை மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி ஒவ்வொரு கருத்திட்டம் வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2024.12.19 ஆம் திகதிய 2415/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் I தொடக்கம் IX வரை விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பணியினதும் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1930/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 9(அ) பிரிவைத் திருத்தி, முறைப்பாட்டாளரின் முகவரியின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அவகாசமளித்தல் பொருத்தமற்றது எனவும்;

(ii) மேற்படி 9(அ) பிரிவைத் திருத்தி சட்டத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி திருத்தத்தைத் துரிதமாக மேற்கொள்வதாக பாராளுமன்றத்தில் பலமுறை தெரிவித்துள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், அது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?